பதினாறாவது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஜார்ஜ் டவுன், சென்னை–01.

| | |
|---|---|
| வழக்கு வரிசை எண் | –687/2022 |
| அரசுத் தரப்பு சாட்சி | –1 |
| பெயர் | –ஹர்திக் |
| தந்தையார் பெயர் | –சங்கர் |
| முகவரி | –எண்.47, பட்டினத்தார் கோவில் தெரு, திருவொற்றியூர், செ–19. |
| வயது | –22 |

1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியச்சட்டம் பிரிவு 10ன் விதிமுறைப்படி 2022 ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 07 ஆம் நாள் என்னால் உறுதி மொழி கூறப்பட்டது.

முதல் விசாரணை – நான் தற்போது பேட்டிரிஷன் கல்லூரியில் பி.காம் இறுதி ஆண்டு படித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது உறவினர் ஆவார். சுமார் 4 மாதங்களுக்கு முன்பு நான் எனக்கு தெரிந்த பெண்ணிற்கு மேசெஜ் அனுப்பியதற்கு ஒரு நபர் என்னை போனில் தொடர்பு கொண்டு என்னை திட்டினார். மேலும் எனது உறவினர் வீட்டில் நான் இருந்தபோது அங்கு ஒரு நபர் என்னிடம் வந்து ஆபாசமாக திட்டி என்னை அடித்தார். அந்த நபர் யார் என்று எனக்கு தெரியாது. சம்பத்தன்று ஆஜர் எதிரிதான் என்னை அடித்தாரா என்று எனக்கு நினைவில் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது போலிசார் கேட்டதால் போட்டுக்கொடுத்தேன். அந்த புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. அந்த கையொப்பம் மட்டும் அதசா.ஆ.1 ஆகும். போலிசார் விசாரணை செய்தனர்.

அரசுத்தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அனுமதிக்கக்கோரி அனுமதிக்கப்பட்டு அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை

கடந்த 22.02.2022 அன்று நான் சினாப் சார்ட்டில் ஒரு பெண்ணிற்கு ஹாய் என மெசேஜ் செய்தேன் என்றும். அதை தவறாக புரிந்து கொண்ட எனது அத்தை மகன் ஹரிஷ் என்பவர் என்னை போனில் தொடர்பு கொண்டு ஏன்டா என் காதலிக்கு ஹாய் என மெசேஜ் செய்தாய் என கேட்டு ஆபாசமாக திட்டினார் என்றும். இதை நான் என் பெற்றோரிடம் கூறினேன் என்றும், உடனே நானும் எனது பெற்றோரும் அன்றைய தினமே இரவு சுமார். 8.30 மணியளவில் எனது அத்தை வீடான சிஜி காலனி 3வது தெரு சென்று கேட்டோம் என்றும் இது சம்மந்தமாக எனது பெற்றோறும் அத்தை வீட்டாரும் வீட்டின் உள்ளே பேசிக்கொண்டிருந்தபோது நான் வெளியே நின்றுக்கொண்டிருந்தேன் என்றும் அங்கு வந்த ஹரிஷ் என்பவர் என்னை ஆபாசமாக திட்டி என் வீட்டு முன்னாடி யாண்டா நிக்குற என்று கூறி கையால் ஓங்கி எனது இடது பக்க தோல் பட்டையில் குத்தினார் என்றும் எங்களுக்குள் கைகலப்பு ஆனது என்றும் சத்தம் கேட்டு வெளியே வந்த பெற்றோர்கள் விலக்கி விட்டனர் என்றும் என்னை திருவொற்றியூர் பிள்ளையம்மன் கோயில் பகுதியில் உள்ள எஸ்எஸ்எஸ் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார் என்றும், நான் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தபோது போலிசார் விசாரணை செய்கையில் மேற்படி உண்மையை கூறி ஹரிஷ் மீது நடவடிக்கை எடுக்கும்மாறு புகார் வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது எதிரி எனது உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் எங்களுக்குள் சமாதானம் செய்துக்கொண்டு குவிமுச

320 ன் கீழ் நீதிமன்றத்தில் மனு செய்துள்ளோம் என்றால் சரிதான்.

எ.கு.வி– இல்லை.

ம.வி. – இல்லை.

ஒம்.எம்.தயாளன்
16 வது பெருநகர குற்றவியல் நடுவர்
ஜார்ஜ் டவுன், சென்னை–01.

பதினாறாவது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஜார்ஜ் டவுன், சென்னை–01.

| | |
|---|---|
| வழக்கு வரிசை எண் | –687/2022 |
| அரசுத் தரப்பு சாட்சி | –2 |
| பெயர் | –சங்கர் |
| தந்தையார் பெயர் | –சண்முகம் |
| முகவரி | –எண்.47, பட்டினத்தார் கோவில் தெரு, திருவொற்றியூர், செ–19. |
| வயது | –54 |

1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியச்சட்டம் பிரிவு 10ன் விதிமுறைப்படி 2022 ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 07 ஆம் நாள் என்னால் உறுதி மொழி கூறப்பட்டது.

முதல் விசாரணை – நான் தற்போது மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். அசா.1 எனது மகன் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும் அவர் எனது தங்கையின் மகன் ஆவார். சுமார் 4 மாதங்களுக்கு முன்பு எனது மகன் அசா.1 அவருக்கு தெரிந்த பெண்ணிற்கு மேசெஜ் அனுப்பியதற்கு ஒரு நபர் அவரை போனில் தொடர்பு கொண்டு அவரை திட்டினார். மேலும் உறவினர் வீட்டில் நாங்கள் இருந்தபோது அங்கு ஒரு நபர் எங்களிடம் வந்து ஆபாசமாக திட்டி எனது மகனை அடித்தார். அந்த நபர் யார் என்று எனக்கு தெரியாது. சம்பத்தன்று ஆஜர் எதிரிதான் அசா.1 ஐ அடித்தாரா என்று எனக்கு நினைவில் இல்லை. போலிசார் விசாரணை செய்தனர்.

அரசுத்தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அனுமதிக்கக்கோரி அனுமதிக்கப்பட்டு அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை

கடந்த 22.02.2022 அன்று எனது மகன் அசா.1 சினாப் சார்ட்டில் ஒரு பெண்ணிற்கு ஹாய் என மெசேஜ் செய்துள்ளார் என்றும். அதை தவறாக புரிந்து கொண்ட எனது தங்கை மகன் ஹரிஷ் என்பவர் எனது மகனை போனில் தொடர்பு கொண்டு ஏன்டா என் காதலிக்கு ஹாய் என மெசேஜ் செய்தாய் என கேட்டு ஆபாசமாக திட்டினார் என்றும். இதை எனது மகன் எங்களிடம் கூறினார் என்றும், உடனே நாங்கள் அன்றைய தினமே இரவு சுமார். 8.30 மணியளவில் எனது தங்கை வீடான சிஜி காலனி 3 வது தெரு சென்று கேட்டோம் என்றும் இது சம்மந்தமாக நாங்கள் வீட்டின் உள்ளே பேசிக்கொண்டிருந்தபோது எனது மகன் வெளியே நின்றுக்கொண்டிருந்தான் என்றும் அங்கு வந்த ஹரிஷ் என்பவர் எனது மகனை ஆபாசமாக திட்டி என் வீட்டு முன்னாடி யாண்டா நிக்குற என்று கூறி கையால் ஓங்கி எனது இடது பக்க தோல் பட்டையில் குத்தினார் என்றும் அவர்களுக்குள் கைகலப்பு ஆனது என்றும் சத்தம் கேட்டு வெளியே வந்த நாங்கள் விலக்கி விட்டோம் என்றும் எனது மகனை திருவொற்றியூர் பிள்ளையம்மன் கோயில் பகுதியில் உள்ள எஸ்எஸ்எஸ் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம் என்றும், எனது மகன் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தபோது போலிசார் விசாரணை செய்கையில் மேற்படி உண்மையை கூறி ஹரிஷ் மீது நடவடிக்கை எடுக்கும்மாறு புகார் வாக்குமூலம் அளித்தார் என்றும் போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி எனது உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் எங்களுக்குள் சமாதானம் செய்துக்கொண்டு குவிமுச 320ன் கீழ் நீதிமன்றத்தில் மனு செய்துள்ளோம் என்றால் சரிதான்.

எ.கு.வி– இல்லை.

ம.வி. – இல்லை.

ஓம்.எம்.தயாளன்
16 வது பெருநகர குற்றவியல் நடுவர்
ஜார்ஜ் டவுன், சென்னை–01.

பதினாறாவது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஜார்ஜ் டவுன், சென்னை–01.

| | |
|---|---|
| வழக்கு வரிசை எண் | –687/2022 |
| அரசுத் தரப்பு சாட்சி | –3 |
| பெயர் | –வெண்மதி |
| கணவர் பெயர் | –சங்கர் |
| முகவரி | –எண்.47, பட்டினத்தார் கோவில் தெரு, திருவொற்றியூர், செ–19. |
| வயது | –45 |

1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியச்சட்டம் பிரிவு 10ன் விதிமுறைப்படி 2022 ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 07 ஆம் நாள் என்னால் உறுதி மொழி கூறப்பட்டது.

முதல் விசாரணை – நான் தற்போது எனது வீட்டு பணிகள் செய்து வருகிறேன். அசா.1 எனது மகன் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும் அவர் எனது நாத்தனாரின் மகன் ஆவார். சுமார் 4 மாதங்களுக்கு முன்பு எனது மகன் அசா.1 அவருக்கு தெரிந்த பெண்ணிற்கு மேசெஜ் அனுப்பியதற்கு ஒரு நபர் அவரை போனில் தொடர்பு கொண்டு அவரை திட்டினார். மேலும் உறவினர் வீட்டில் நாங்கள் இருந்தபோது அங்கு ஒரு நபர் எங்களிடம் வந்து ஆபாசமாக திட்டி எனது மகனை அடித்தார். அந்த நபர் யார் என்று எனக்கு தெரியாது. சம்பத்தன்று ஆஜர் எதிரிதான் அசா.1 ஐ அடித்தாரா என்று எனக்கு நினைவில் இல்லை. போலிசார் விசாரணை செய்தனர்.

அரசுத்தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அனுமதிக்கக்கோரி அனுமதிக்கப்பட்டு அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை

கடந்த 22.02.2022 அன்று எனது மகன் அசா.1 சினாப் சார்ட்டில் ஒரு பெண்ணிற்கு ஹாய் என மெசேஜ் செய்துள்ளார் என்றும். அதை தவறாக புரிந்து கொண்ட எனது நாத்தனார் மகன் ஹரிஷ் என்பவர் எனது மகனை போனில் தொடர்பு கொண்டு ஏன்டா என் காதலிக்கு ஹாய் என மெசேஜ் செய்தாய் என கேட்டு ஆபாசமாக திட்டினார் என்றும். இதை எனது மகன் எங்களிடம் கூறினார் என்றும், உடனே நாங்கள் அன்றைய தினமே இரவு சுமார். 8.30 மணியளவில் எனது நாத்தனார் வீடான சிஜி காலனி 3 வது தெரு சென்று கேட்டோம் என்றும் இது சம்மந்தமாக நாங்கள் வீட்டின் உள்ளே பேசிக்கொண்டிருந்தபோது எனது மகன் வெளியே நின்றுக்கொண்டிருந்தான் என்றும் அங்கு வந்த ஹரிஷ் என்பவர் எனது மகனை ஆபாசமாக திட்டி என் வீட்டு முன்னாடி யாண்டா நிக்குற என்று கூறி கையால் ஓங்கி எனது இடது பக்க தோல் பட்டையில் குத்தினார் என்றும் அவர்களுக்குள் கைகலப்பு ஆனது என்றும் சத்தம் கேட்டு வெளியே வந்த நாங்கள் விலக்கி விட்டோம் என்றும் எனது மகனை திருவொற்றியூர் பிள்ளையம்மன் கோயில் பகுதியில் உள்ள எஸ்எஸ்எஸ் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம் என்றும், எனது மகன் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தபோது போலிசார் விசாரணை செய்கையில் மேற்படி உண்மையை கூறி ஹரிஷ் மீது நடவடிக்கை எடுக்கும்மாறு புகார் வாக்குமூலம் அளித்தார் என்றும் போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி எனது உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் எங்களுக்குள் சமாதானம் செய்துக்கொண்டு குவிமுச 320ன் கீழ் நீதிமன்றத்தில் மனு செய்துள்ளோம் என்றால் சரிதான்.

எ.கு.வி– இல்லை.

ம.வி. – இல்லை.

ஒம்.எம்.தயாளன்
16 வது பெருநகர குற்றவியல் நடுவர்
ஜார்ஜ் டவுன், சென்னை–01.

பதினாறாவது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஜார்ஜ் டவுன், சென்னை–01.

| | |
|---|---|
| வழக்கு வரிசை எண் | –687/2022 |
| அரசுத் தரப்பு சாட்சி | –4 |
| பெயர் | –பாலாஜி(சிறப்பு சார்பு ஆய்வாளர்) |
| தந்தையார் பெயர் | –சுந்தரராஜ் |
| முகவரி | – |
| வயது | –47 |

1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியச்சட்டம் பிரிவு 10ன் விதிமுறைப்படி 2022 ஆம் ஆண்டு ஜீலை திங்கள் ஆம் நாள் என்னால் உறுதி மொழி கூறப்பட்டது.

முதல் விசாரணை –நான் தற்போது என்.2 காசிமேடு காவல் நிலையத்தில் ச ஒ பிரிவில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகளான சார்பு ஆய்வாளர்கள் திரு.நிஷாந்த் மற்றும் திரு.ஜோசப் செல்வராஜ் ஆகியோர் என்னுடன் பணிபுரிந்தவர்கள் என்பதாலும் அவர்களது கையெழுத்து எனக்கு நன்கு தெரியும் என்பதாலும் இந்த வழக்கில் ஏற்படும் காலதாமதத்தினை தவிற்கும்பொருட்டு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 22.02.2022 அன்று 23.30 மணிக்கு இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சார்பு ஆய்வாளர் திரு.நிஷாந்த் அவர்கள் நிலைய அலுவலில் இருந்தபோது திருவொற்றியூர் SSS மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அர்திக் ஆ/வ.21 என்பவரை விசாரணை செய்து அவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தைபெற்று நிலையம் வந்து 23.02.2022 அன்று காலை 8.00 மணியளவில் நி.கு.எண்.41/2022 இதச பிரிவுகள் 294(b). 323 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த புகார் வாக்குமூலம் அதசா.ஆ.2 ஆகும். அந்த முதல் தகவல் அறிக்கை அதசா.ஆ.3 ஆகும். புகார்தாரரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளான அசா.2 சங்கர் மற்றும் அசா.3 வெண்மதி ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். 23.02.2022 அன்று காலை 10.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஜெயலட்சுமி மற்றும் சாமுவேல் ஆகியோர் முன்னிலையில் சம்பத்தை பார்வையிட்டு மாதிரி வரைப்படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். அவைகள் முறையே அதசஆ.4 மற்றும் அதசஆ.5 ஆகும். பார்வை மகஜர் சாட்சிகளை தனித்தனியே விசாரணைசெய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அசா.1க்கு முதலுதவி சிகிச்சை அளித்த திருவொற்றியூர் SSS மருத்துவமனை மருத்துவர் திரு.சரவணன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து அவர் வழங்கிய விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழை பெற்றுள்ளார். அதில் அசா.1க்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று சான்றளிக்கப்பட்டுள்ளது. அந்த விபத்துபதிவேடு அதசஆ.6 ஆகும். அந்த காயச்சான்றிதழ் அதசஆ.7 ஆகும். இந்நிலையில் இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சார்பு ஆய்வாளர் நிஷாந்த் என்வர் பணி இடமாறுதலில் சென்றுவிட்டதால் வழக்கு கோப்புகளை தொடர் புலன் விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் ஜோசப்செல்வராஜ் என்பவரிடம் ஒப்படைத்துள்ளார். வழக்கு கோப்புகளை பெற்றுக்கொண்ட ஜோசப்செல்வராஜ் வழக்கின் எதிரியான ஹரிஷ் என்பவரை 29.05.2022 அன்று மதியம் 13.00 மணிக்கு என்.2 காசிமேடு காவல் நிலையத்தில் வைத்து கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் எதிரி மீது புலன்

விசாரணை நிறைவு செய்து அதே பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

எ.கு.வி–இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி நான் இல்லை என்றும் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

ம.வி. – இல்லை.

ஒம்.எம்.தயாளன்
16 வது பெருநகர குற்றவியல் நடுவர்
ஜார்ஜ் டவுன், சென்னை–01.